**திருகோணமலை நகர சபை**

**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 06 மாத தாமதத்தின் பின்னர் 2016 செப்டம்பர் 05 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர நிதிக்கூற்றுக்களில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திருகோணமலை நகர சபையின் நிதி நிலமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

கணக்குகளைக் கடைப்பிடிப்பதற்கு கடைப்பிடிக்கப்படும் கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெற வேண்டிய உத்தியோகபூர்வ மனைகளுக்கான வாடகை மீதி ரூபா 482,642 ஆகும். எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டின்போது அம்மீதி ரூபா 461,807 ஆக முன்கொண்டுவரப்பட்டிருந்தது. ஆகவே, பெற வேண்டிய கடை வாடகை மீதி ரூபா 20,835 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினது நிலையான வைப்புகளுக்குரிய வட்டி வருவாயாகிய ரூபா 733,333 கணக்கிலிடப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கென பெற வேண்டிய தீர்வை வரி மீதியாகிய ரூபா 11,442,929 பெற வேண்டியவையாக ஐந்தொகையில் காட்டப்பட்டபோதும், நிதிச் செயலாற்றல் கூற்றில் அது வருவாயாக காட்டப்பட்டிருக்கவில்லை. ஆகவே, மீளாய்வாண்டிற்கான வருவாய் அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருட் கணிப்பின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறான பொதுக் களஞ்சிய பொருட்களது மொத்தப் பெறுமதி ரூபா 10,945,878 ஆகும். எவ்வாறாயினும், அது ரூபா 5,495,204 ஆகக் கணக்கிடப்பட்டமையால் பொதுக் களஞ்சியப் பொருட்களது பெறுமதி ரூபா 5,450,674 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) சூடாக்கும் இயந்திரம் (Incinerator) ஒன்றை 2015 ஆம் ஆண்டின் போது சபை ரூபா 2,705,000 செலவில் கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், அவ்வுபகரணத்தின் கிரயமாக நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டது ரூபா 1,352,000 மாத்திரமே. அதன் விளைவாக மொத்தக் கிரயமானது ரூபா 1,352,500 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) கேட்போர் கூடத்தையும் எரிபொருள் நிலையத்தையும் நிர்மாணிப்பதற்கான சபையின் மொத்தக் கிரயம் ரூபா 16,887,724 ஆகும். இக்கட்டிடங்கள் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்படவில்லை.

(எ) வர்த்தகக் கூட்டுத்தொகுதி, சிகிச்சை நிலையம், தீயணைப்பு பிரிவு ஆகியவற்றினது கட்டிடங்கள் கணக்கிலிடப்படவில்லை.

(ஏ) சபையால் பேணப்படும் பதிவேடுகளின் பிரகாரம், விழா முற்பண மீதியும் புத்தக முற்பண மீதியும் முறையே ரூபா 84,250 மற்றும் ரூபா 6,750 என்பனவாகும். எவ்வாறாயினும், அம்மீதிகள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 91,750 மற்றும் ரூபா 10,750 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் விழா முற்பணம் மற்றும் புத்தக முற்பண மீதிகள் ரூபா 11,500 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 3,239,972 கணக்காய்வுக் கட்டணம் கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.3 தொங்கல் கணக்கு

தொங்கல் கணக்கில் உள்ள செலவு மீதியாகிய ரூபா 11,863,654 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கையின்றி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இணங் காணப்படாத மீதியாகிய ரூபா 6,161,644 கூட்டுத் தொகையானது 2003 முதல் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. எவ்வாறாயினும், அம்மீதியை அறவிடுவதற்கு அல்லது கணக்கீட்டுப் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) இனங் காணப்படாத ரூபா 4,545,638 செலவு மீதியை இனங்கண்டு அதனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது 2008 முதல் நிதிக்கூற்றுக்களில் தொடர்சியாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

மொத்தக் கூட்டுத் தொகையாகிய ரூபா 28,376,583 உடைய 13 கணக்கீட்டு விடயங்களை இனங்கண்டு அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்காது அநேக ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவை உள்ளனவா என்பதை உறுதி செய்வதற்கான எதுவித ஆவணச் சான்றும் இன்மையால் அவற்றை சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் ரூபா 474,076 பெறுமதியான 08 காசோலைகள் சம்பந்தமாக 03 ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 1646 | சபைக்குரிய 38 வாகனங்களது மாதாந்தப் பொழிப்புகளைப் பேணி அவற்றைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (இ) 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மோட்டார் வாகனங்களது எரிபொருள் நுகர்வு 06 மாதங்களுக்கு ஒரு முறை பரிசீலிக்கப்பட வேண்டுமாயினும், சபையினது 38 வாகனங்கள் சம்பந்தமாக அவ்வாறு பரிசீலனை மேற்கொள்ளப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 8,437,984 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 29,061,043 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிப்பெறுபேற்றில் ரூபா 20,623,059 நலிவு காணப்பட்டது.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 வருவாய் சேகரிப்பிலான செயலாற்றல்

(அ) செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2016 ஆம் ஆண்டு | | |
|---|---|---|---|
| வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறான வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| தீர்வையும் வரியும் | 39,555 | 34,788 | 98,369 |
| குத்தகை வாடகை | 17,171 | 22,779 | 19,404 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,720 | 4,258 | இல்லை |
| ஏனைய வருவாய் | 22,821 | 11,620 | 431 |

(ஆ) நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம், கடைகளது வாடகை நிலுவை அறவீடாகக் குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 4,118,295 மொத்தத் தொகையாக 2016 ஆம் ஆண்டின்போது பெறப்பட்டிருந்தது. மொத்த நிலுவைத் தொகையிலிருந்து இம் மொத்த அறவீடும் கழித்துக் கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒவ்வொரு குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட குத்தகைத் தொகையை இனங்காண்பதற்கும் குறித்த குத்தகையாளரின் நிலுவையைக் கழித்துக் கொள்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன் விளைவாக, அறவிடப்பட வேண்டிய தொகை தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ள போதும், ஒவ்வொரு குத்தகையாளரிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய தொகை முன்கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 வாடகை வருவாய் நிலுவை

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர சபைக்குரிய உத்தியோகபூர்வ மனைகளில் குடியிருந்த 34 உத்தியோகத்தர்கள் பல ஆண்டுகளாக அம்மனைகளுக்குரிய வாடகைகளைச் செலுத்தாது இருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 429,432 நிலுவையாகவும் இருந்தது. எவ்வாறாயினும், அவ்வாடகை நிலுவையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) அனுராதபுரம் சந்தியில் லிங்க நகரிலும் மத்திய பஸ் தரிப்பிடத்திலும் அமைந்துள்ள 300 கடைகள் நகர சபையால் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 268 கடைகளிலிருந்து ரூபா 14,200,543 வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது 08 ஆண்டுகளாக நிலுவையாகவிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையீன்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015, 2016 ஆம் ஆண்டுகளுக்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ஆகியவற்றினது மொத்தத் தொகையையும் இனங்காண்பதற்கும் அதனை கிழக்கு மாகாண, மாகாணத் திறைசேரியிலிருந்து அறவிடுவதற்குமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) குறித்த நபர்களுடன் உடன்படிக்கைகளில் ஈடுபடாது தனி நபர்களுக்கு 6 உத்தியோகபூர்வ மனைகளை நகர சபை 2005 முதல் வாடகைக்கு வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், வாடகை நிலுவையை அறவிடுவதற்குச் சபை இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(இ) இலங்கை வங்கியில் உள்ள நடைமுறைக் கணக்கொன்று 5 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செயற்படாதிருந்தது. எனினும், இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(ஈ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் நன்கொடையாக வழங்கப்பட்ட 09 வாகனங்களது உரித்தைச் சுவீகரிப்பதற்கு 5 ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர சபைக்குரிய 299 கடைகளில் 90 கடைகள் 2011 முதல் பயனற்றிருந்தன. எவ்வாறாயினும், இக்கடைகளை வாடகைக்கு வழங்குவதற்குச் சபை இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. அதன் விளைவாக, வருடாந்தம் அண்ணளவாக சபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 2,000,000 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின்போது வாடகைக்கு வழங்கியிருந்த 21 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 1,330,104 ஆகும். இதில் எதுவுமே சபையால் அறவிடப்படவில்லை.

(இ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 164(2) ஆம் பிரிவின் பிரகாரம், சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் இயங்கும் சுற்றுலா ஹோட்டலகளது மொத்த வருவாயின் அடிப்படையில் அந்த ஹோட்டல்களிலிருந்து வரி அறவிடப்பட வேண்டுமாயினும், சபையானது சுற்றுலா ஹோட்டல்களிலிருந்து 2016 ஆம் ஆண்டிற்கான வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

#### 3.3.1 நைட் சொயில் ட்ரீட்மெண்ட் பிளான்ட் (Night Soil Treatment Plant) ஐ நிர்மாணித்தல்

நைட் சொயில் ட்ரீட்மென்ட் பிளான்டை ரூபா 6,401,355 பெறுமதியில் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை 2012 சனவரி 28 ஆந் திகதி சபை வழங்கியிருந்தது. இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தகாரர் ரூபா 4,485,156 க்கான விலைப்பட்டியலுக்குரிய தொகையை பெற்றதன் பின்னர் நிர்மாண வேலையை கைவிட்டிருந்தார். எவ்வாறாயினும், அவரைத் தவறிழைத்தவர் பட்டியலில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கையைச் சபை மேற்கொள்ளவில்லை.

(ஆ) மேற்குறித்தவாறு இடை நடுவே, வேலையை ஒப்பந்தகாரர் நிறுத்தி இருந்த போதும், உள்ளூராட்சி திணைக்களத்தின் மாகாண பொறியியலாளர் மொத்த வேலையும் திருப்திகரமாக முடிவடைந்ததாக தனது 2014 நவம்பர் 20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சான்றுறுதிப்படுத்தியிருந்தார். அதற்கமைய, சபையானது நிறுத்தி வைத்திருந்த ரூபா 304,491 ஐ ஒப்பந்தகாரருக்கு விடுவித்திருந்தது.

(இ) முறையான சாத்தியக்கூறு ஆய்வின்றி ஒப்பந்தம் வழங்கப்பட்டமையால் இந்நிர்மாண வேலைக்கான செலவினம் பயனற்ற செலவினமாகியது.

### 3.3.2 மின் வேலி அமைத்தல்

திண்மக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட காணியைச் சூழவர மின்வேலியை அமைப்பதற்கு 2014 யூன் 20 ஆந் திகதியன்று ரூபா 893,060 க்கான ஒப்பந்தத்தை உள்ளூராட்சி ஆணையாளர் வழங்கியிருந்தார்.

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறிப்பிடப்பட்ட அளவுகள் மற்றும் திட்டங்களின் பிரகாரம், வேலியை அமைப்பதற்குப் பொருத்தப்படும் 2 மரக் குற்றிகளுக்கிடையே 4 மீட்டர் வித்தியாசம் இருக்க வேண்டும். எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் மரக்குற்றிகளுக்கிடையே 33 மீட்டர் வித்தியாசத்தில் அவற்றை அமைத்திருந்தார். அதன் விளைவாக, மின் வேலியில் பொருத்தப்பட்ட முக்கட்ட (Three phase) கம்பிகள் உராய்ந்தவாறிருந்தன.

(ஆ) மின் வேலிக்கு மின்சாரம் வழங்காமையால் ஒப்பந்தகாரர் அமைத்த மரத்தாலான தூண்கள் அமைக்கப்பட்ட நாள் முதலாகக் காட்டு யானைகளால் அவை பாதிப்புக்குள்ளாகியிருந்தன.

(இ) 2015 ஒக்டோபர் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது தூண்கள், கம்பி போன்ற மின் வேலி அமைப்பதற்கெனப் பயன்படுத்தப்பட்ட சகல பொருட்களும் இனந்தெரியாதவர்களால் அகற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகவே, இது தொடர்பாகச் செலவழிக்கப்பட்ட ரூபா 618,858 பயனற்ற செலவாகியது.

### 3.4 சுற்றாடல் பிரச்சினைகள்

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள், சீமெந்து வேலை, தச்சு வேலை, கராஜ், நெல்லரைக்கும் ஆலைகள் என்பவற்றை நடாத்தும் தொழில் முயற்சியாளர்கள் நகர சபையிடமிருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை பெற வேண்டும். எவ்வாறாயினும், தொழில் முயற்சியாளர்கள் அவ்வாறான அனுமதிப் பத்திரங்களைப் பெறாது மேற்குறித்த முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட வருவாய் மற்றும் செலவினம் மற்றும் உள்ளவாறான வருவாய் மற்றும் செலவினம் என்பவற்றுக்கிடையே 16 முதல் 52 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் நிலவியமையால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 சொத்து முகாமைத்துவம்

#### 4.2.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டு சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான பதினைந்து வாகனங்கள் 01 ஆண்டு தொடக்கம் 08 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் போது திருத்துவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமல் அலுவலக வளாகத்தில் விளைவற்றிருந்தன.

#### 4.2.2 பொருள் மெய்மையாய்வுச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட பொருட் கணிப்பின் பிரகாரம், 222 பொருட்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் 203 பொருட்களையும் நூலகப் புத்தகங்களையும் கைதவிர்ப்புச் செய்வதற்கும் 430 பொருட்களையும் நூலகப் புத்தகங்களையும் பழுதுபார்ப்பதற்கும் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அச்சிபார்சு 2017 யூன் 13 வரை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டிற்கென நடாத்தப்பட்ட பொருட் கணிப்பின்போது 1652 நூலகப் புத்தகங்கள் குறைவாக இருந்தமை புலனாகியது. எவ்வாறாயினும், நூலகப் புத்தகக் குறைவு சம்பந்தமாக பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(iii) நிதிப்பிரமாணம் 757 க்கமைய 2016 ஆம் ஆண்டிற்கான பொருட் கணிப்பை மேற்கொள்ள வேண்டுமாயினும், நகர சபை 2017 யூன் 13 வரை பொருட் கணிப்பை மேற்கொள்ளவில்லை.

### 4.3 பதில் கிடைக்கப் பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2016 ஆம் ஆண்டின்போது வழங்கப்பட்ட 2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை நகர சபை மேற்கொள்ளவில்லை. அக்கணக்காய்வு ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களது மொத்தப் பெறுமதி ரூபா 6,733,227 ஆகும்.

### 4.4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினது கணக்காளர் பதவி 11 ஆண்டுகளாக வெற்றிடமாக இருந்தது. எவ்வாறாயினும், உத்தியோகத்தர் ஒருவரை நிரந்தரமாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) வெற்றிடமாக காணப்பட்ட சுகாதார மேற்பார்வையாளர், சுகாதார மருத்துவப் பெண், பொது சுகாதார பரிசோதகர், மொழிபெயர்ப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சந்தை மேற்பார்வையாளர்கள், மோட்டார் மேன் மற்றும் தீயணைப்பாளர் ஆகிய பதவிகள் கணக்காய்வுத் திகதியான 2017 யூன் 13 வரை பதவிகள் 2017 யூன் 13 வரை நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமை | கணக்காய்விற்கான சான்றின்மை |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | முறையற்றவாறு பேரேட்டைப் பேணுவது மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களையும் வருவாயையும் அறிக்கையிடுதல். |
| (ஆ) | வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு | வருவாயையும் செலவினத்தையும் முன் கூட்டியே தீர்மானிக்காது வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டைத் தயாரித்தல். |
| (இ) | வருவாய் நிர்வாகம் | வருவாய் நிலுவை அறவீட்டில் நீண்ட தாமதம் |
| (ஈ) | மனிதவள முகாமைத்துவம் | பிரதான பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதில் நீண்ட தாமதம் |
| (உ) | ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்த வேலகளைக் கைவிட்ட ஒப்பந்தகாரர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளாமை |